# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12 பிப்ரவரி - 1999 இதழ் - 2



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

**தமிழ்நாடு, இந்தியா.**

# அரிய வாய்ப்பு

**திருமறை ஆசான்** மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள **இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.**

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 25/— மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே


1. 'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வதில் என்ன சங்கடம்? 1
2. ஜெபம் பண்ணுவது எப்படி? 9
3. வசனங்களுடன் ஒப்பிடுதல் 14
4. தேவ ஆசீர்வாதம் யாருக்கு? 19
5. கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவியின் ஊழியம் 22
6. தண்ணீரைப்போல தளம்பினவன் 24
7. கர்த்தருக்குப் பயப்படும் பயம் எங்கே? 27
8. "என் கிருபை உனக்குப் போதும்" 31

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C.CHOATE**

**Published by Church of Christ**
**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

ஒளிந் 12 ங்கூகிளுளுகளுடி 1999 ஸ்புமூதி 2

## ஆசிரியவுரை

# ‘கிறிஸ்தவன்’ என்று மட்டும் கூறிக் கொள்வதில் என்ன சங்கடம்?

பலவிதக் கொள்கைகளும், சித்தாந்தங்களும் ஒன்றோடொன்று மோதிக் கொள்கிற இந்த நாட்களில், எவ்விதமான அடைமொழிகளையும் சேர்த்துக் கொள்ளாமல் வேதம் கூறுகிறபடி ‘கிறிஸ்தவன்’ என்று மட்டும் கூறிக் கொள்வது நியாயமான காரியம். ஆனால் அதை ஏற்றுக் கொள்வற்கு நாம் ஏனோ தயங்குகிறோம்.

ஒரு வேளை இன்றைக்குக் கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரிந்து நிற்கும் சூழ்நிலையில் **‘கிறிஸ்தவன்’** என்று மட்டும் கூறிக் கொள்வது சாத்தியமாக இருக்குமா என்று யோசிக்கிறோமா? பல பாதைகள் ஒன்றையொன்று குறுக்கிட்டு பல பக்கங்களில் பிரிந்து நிற்கும்போது, எத்திசையில் செல்வது என்று தடுமாறுகிற ஒரு வழிப்போக்கனுக்கு எல்லாமே நல்ல பாதை போன்று தான் தோன்றும். போதாதற்கு ஒவ்வொரு பாதையிலும் சிலர் நின்று கொண்டு, “இங்கே வாருங்கள்”, “அதோ அதுதான் நேர்வழி” என்று கத்தி அழைத்தால் இன்னும் குழப்பமே ஏற்படும்.

அது போன்ற ஒரு நிலை தான் இன்றைக்குக் கடவுளைத் தேடுகிற மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சிலர் வெறுப்படைந்து,

இவைகளில் எதுவுமே சரியில்லை என்ற முடிவுக்கு வந்து கடவுளைத் தேடுவதற்கே மனமில்லாமல் ஒதுங்கிக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் "எல்லாமே சரிதான்" என்று எல்லாவற்றிற்கும் தலையசைத்துக் கொண்டு, எந்தவிதமான நோக்கமும், கொள்கையும், குறிக்கோளும் இல்லாமல் காலத்தை ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். வேறு சிலர் நான் எல்லா சபைகளுக்கும் சென்று அவர்களுடைய போதனைகள், ஆராதனை ஒழுங்குகள் அனைத்தையும் கவனிப்பேன், பிறகு எது என் மனதுக்குப் பிடிக்கிறதோ அதில் நான் சேர்ந்து கொள்வேன் என்கின்றனர். எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும் இந்த முறை பெரும்பான்மையோருக்குச் சரி என்று தோன்றலாம்.

ஆனால் நமக்கு இருக்கிற இந்தக் குறுகிய வாழ்நாளில் "நாளொரு கொள்கையும், பொழுதொரு சபையுமாக உதயமாகிக் கொண்டிருக்கிற அனைத்துச் சபைகளின் உபதேசங்களையும் கோட்பாடுகளையும் சோதித்துப் பார்ப்பது என்பது ஆகிற காரியமா? இப்படிப்பட்டவர்கள் தாங்கள் சந்திக்கிற ஏதாவது ஒரு குழுவினரின் தொழுகைமுறை, மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டு விட்டார்களானால், அப்புறம் அதிலேயே மூழ்கி அதுவே தேவன் தனக்குக் காட்டின சபை என்று கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டு வேறு எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுவார்கள். அவர்களுடைய உபதேசங்கள் வேதாகமத்தின் வெளிச்சத்தில் பார்த்தால் தவறு என்று சுட்டிக் காட்ட முற்பட்டால் கூட அதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குத் தங்கள் மனதைக் கல்லாக்கிக் கொள்வார்கள். இது தான் இன்றைக்கு மக்கள் மத்தியில் காணப்படும் பக்தி நிலை, இந்த மனப்பான்மை உண்மையை அறிந்து கொள்வதற்கு உதவாது. கிளிஜோஸ்ய முறையில் மெய்யான மார்க்கத்தைக் கண்டு கொள்ள முடியாது. வேதாகமம் கூறுகிறவைகளைப் படித்துப்புரிந்து கொண்டால் தான் சத்திய மார்க்கத்தை அறிந்து கொள்ளமுடியும்.

இது விஷயத்தில் இயேசுவின் அன்பான அழைப்பைக் கேளுங்கள். **"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே,நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" (மத் 11:28,29) இந்த அழைப்பில் உள்ள உருக்கத்தையும், கரிசனையையும் கவனியுங்கள். வைக்கோல் போருக்குள் கிடக்கிற ஊசியைத் தேடுவது போன்று ஏராளமான மார்க்க பேத முதலாளிகளின் வார்த்தைகளைக் கேட்டுக் குழப்பமடைவதை விட்டு விட்டு "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறேன்" (யோவான் 14:6) என்று

கூறும் இயேசுவிடம் நேரடியாகச் செல்வது நன்மை தரும். அவர் ஒருவரே உண்மையானவரும், நீதிபரரும் ஆவார். அவருக்குச் சீடர்களாக விரும்பும் அனைவரும் அவரிடம் நேராக வந்து அவரிடத்தில் கற்றுக் கொள்வது சிறந்தது.

இப்படி நாம் யோசித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று நமக்கு இன்னொரு சந்தேகம் எழும்புகிறது. தேவனுடைய வசனத்தின் மூலமாக நான் இயேசுவினிடத்தில் வந்து உண்மை வழியைக் கற்றுக் கொள்ள முடியுமா? எல்லா கூட்டத்தாருமே வேதத்தின் வெளிச்சத்தில் நடப்பதாகத் தானே கூறிக் கொள்கிறார்கள்? ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வியாக்கியானம் செய்கிறார்களே! எவ்வளவோ கற்றறிந்த மேதைகள் எல்லாம் புரிந்து கொள்ள முடியாத தேவ இரகசியங்களைப் பேதையாகிய நான் புரிந்து கொள்ள முடியுமா? நான் செல்லுகிற பாதைதான் சரி என்று நான் எதை வைத்து உறுதி செய்வது?

நண்பர்களே, நாம் நினைத்துப் பயப்படுகிற அளவுக்கு விஷயம் அவ் வளவு கடினமானதல்ல. ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் காரியம் கல்வியறிவினால் தீர்மானம் செய்யப் படும் விஷயம் அல்ல, அல்லது மனித அறிவினாலும், திறமையினாலும் முடிவெடுக்கும் விஷயமும் அல்ல. இது விசுவாசத்தையும் மனப்பக்குவத்தையும் பொறுத்த விஷயம் காற்றையும், கடலின் அலைகளையும் கண்டு பயப்பட்ட பேதுருவின் விசுவாசத்தைப் போன்ற விசுவாசத்தின் மூலமாக அல்ல,(மத் 14) நம்மைப் பெயர் சொல்லி அழைத்த கர்த்தரின் வல்லமையின் பேரிலும், கைவிடாத தன்மையின் பேரிலும் சார்ந்திருக்கும் விசுவாசம், அவரையும் அவருடைய வழிகளையும் உண்மையாய்த் தேடுகிற ஆத்துமாவை அழியவிடார். ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும், தாழ்மையுள்ளவர்களுக்கும், நீதியின்மேல் பசிதாகம் உள்ளவர்களுக்கும், அவருடைய சித்தத்தைச் செய்கிறவர்களுக்கும், அவருடைய சத்தத்துக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படிகிறவர்களுக்கும் கூட செவி கொடுக்கிறார். (மத் 5: 3 - 6; யோவான் 7:17:10:4,27) இந்த அர்த்தத்தில் தான் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களை அழைத்து அவர்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார். அவருடைய நுகத்தை ஏற்றுக் கொண்டு அவரிடத்தில் கற்றுக் கொள்ள அழைக்கிறார். ஒரு மனிதன் சரியான வழியைக் கண்டு கொள்வதற்கு இது தான் சிறந்த வழி. உங்களுடைய நம்பிக்கையையும், எதிர்காலத்தையும் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து அவரிடத்தில் கற்றுக் கொள்ள முயலுங்கள்.

கல்வியறிவும், திறமையும் அவசியம். அதை வைத்துக் கொண்டு ஆன்மீக காரியங்களில் ஒருவன் மற்றொரு மனிதனுக்கு உதவவே முடியாது என்று நான்

வாதிடுவதாக நினைக்க வேண்டாம். ஒரு மனிதன் தன் சக மனிதனுக்குச் செய்யக் கூடிய உண்மையான உதவி கர்த்தருடைய வசனத்துக்கு அவனை வழி நடத்தி, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவ சித்தம் என்ன என்பதைக் கற்றுக் கொடுப்பதாகும்.

ஒவ்வொருவரும் இவ்விதமாய் வழி நடத்தப்படுவார்களானால், இன்றைக்கு செழித்து வளர்ந்து கொண்டிருக்கிற பல சபைகள் என்ற பெயரில் இயங்கி வரும் போலி ஸ்தாபனங்கள் நிலைகுலைந்து அழிந்து போவது திண்ணம். தங்களுடைய வார்த்தை ஜாலங்களால் படித்தவர்களையும் பாமர மக்களையும் ஒரு சேர மயக்கித் தவறான பாதையில் நடத்திச் செல்லும் மார்க்க பேத முதலாளிகள், தத்துவம் பேசும் வேதாந்திகள், வரம் பெற்ற மகான்கள், சத்தியத்தைச் கற்றுத் தங்கள் சித்தாந்த வலைகளைப் பின்னி பேதைகளை ஈர்க்கிற கலையில் கை தேர்ந்தவர்கள் ஆகியோர் தங்களுடைய போலி சரக்குகளுக்கு மார்க்கெட் இல்லாமல் தடுமாறுவார்கள். உண்மை ஓங்கும், ஒற்றுமை வளரும்.

ஒவ்வொரு மனிதனும் தாங்களாகவே தங்கள் வேதாகமத்தை வாசிக்க முற்பட்டால் ஆளுக்கொரு விதமான அபிப்பிராயம் தோன்றி மேலும் பிரிவினைகளும் குழப்பங்களும் அதிகம் ஆகும் என்று ஒரு சாரார் வாதிடக் கூடும். ஆனால் அது தேவையற்ற பயம், தேவனுடைய வார்த்தையை விட்டு விலகியும், கூட்டியும், குறைத்தும் மாந்த அறிவைப் பயன்படுத்தித் தவறுதலாக வியாக்கியானம் செய்வதால் தான் பிரிவினை உண்டாகிறதேயொழிய தேவனுடைய வசனத்தை வாசித்து தியானிப்பதினால் அல்ல.

மேலும் பிரிவினைகளும், குழப்பங்களும் முளைத்து செழித்து வளர்வது எப்பொழுது என்றால் விசுவாசிகள் என்பவர்கள் தங்கள் போதகர்களையும் குருமார்களையும் கண்மூடித்தனமாய் பின்பற்றுவதினாலும் பரிசுத்த வேதாகமத்தைப் பகுத்துப் படிக்காததினாலும் தான். விசுவாசிகள் திறந்த மனதுடன் இயேசுவிடம் வந்து கற்றுக் கொள்வார்களானால் சத்தியத்தைப் பற்றி ஒருமித்த கருத்து ஏற்பட்டு ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு ஒத்த மனமுடையவர்களாய் ஒன்றாக இருப்பார்கள்.

உலகத்திலுள்ள எல்லா மதங்களிலும், மார்க்கங்களிலும் சில உண்மைகள் இருக்கின்றன என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் மெய்க் கிறிஸ்தவ மார்க்கமே அனைத்து உண்மைகளையும் உடையதாக இருக்கிறது என்பதை நாம் அச்சடித்துக் கூறுகிறோம். "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது என்கிறார் பவுல் (கொலோ 2:3) ஆகவே ஒரு கிறிஸ்தவன் வேதாகமத்தை எடுத்து அனுதினமும் வாசித்து

காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று ஆய்ந்து பார்க்கிற மனப்பக்குவம் அடைய வேண்டும். அப்பொழுது சத்தியம் அவனை விடுதலையாக்கும் (யோவான் 8:32) அப்பொழுது மனிதனால் உண்டாக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்குச் சப்பைக் கட்டுக் கட்ட வேண்டியதில்லை அவன் எந்த ஒரு மனிதனையும் 'ரபீ' என்று அழைக்க வேண்டியதில்லை. பூலோகத்தில் "தந்தை" என்ற பட்டம் உள்ளவர்களை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை, கிறிஸ்து ஒருவரே குருவும் ஆசானுமாக இருக்கிறார். தேவனே பிதாவாக இருக்கிறார். (மத் 23: 8 - 10) மத உலகத்தை அடிமை கொண்டிருக்கும் மனிதப் பாரம்பரியங்களும், கொள்கை கோட்பாடுகளும் அவனை அனுகுவதில்லை. இந்த அடைமொழிகளை உதறித் தள்ளி விடுகிற தேவனுடைய பிள்ளைகள் வேதாகமத்தைத் திறந்த மனதுடன், மாந்த அறிவினால் பின்னப்பட்ட அனைத்துத் தவறான உபதேசங்களையும் அறுத்துக் கொண்டு புதிய சிந்தையோடு கிறிஸ்துவின் தூய உபதேசத்தைப் பருகி மகிழ்கிறார்கள். எதுவும் எழுதப்படாத - மாந்த அறிவால் கறைப்படாத சுத்தமான இதயத்தை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்கிறார்கள். தேவன் கட்டாத இடத்தில் கட்டும் சித்து விளையாட்டுக்காரர்கள் கட்டுத்திட்டங்கள் என்ற மூலாம் பூசி. தங்கள் கள்ள போதகங்களை இதமாக உள்ளே நுழைத்து தந்திரமாய்ப் பிடிக்க வகை தேடும் பொல்லாதவர்களின் சூழ்ச்சி வலைக்குச் சிக்கமாட்டார்கள். அவர்களுடைய இச்சகப் பேச்சில் மயங்கி, அறிவிழந்து, பேதைகளாகமாட்டார்கள். மஞ்சள் கண்ணாடி அணிந்தவர்களைப் போல தேவனுடைய செம்மையும், எளிமையுமான வசனங்களுக்கு விதவிதமான அர்த்தங்களைக் கற்பனை செய்து தங்கள் எண்ணங்களையும் சிந்தனையோட்டங்களையும் களங்கப்படுத்திக் கொள்ளமாட்டார்கள். இந்தக் கள்ளப் போதகர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு கொலோசே பட்டணத்து விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் பவுல் அறிவுரை கூறுவதை வாசியுங்கள்.

## "ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்"

"ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும் அவர் மேலே கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக! லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" (கொலோ 2:4,6-8)

ஒருவன், மார்க்க சம்பந்தமான விஷயங்களில் தனக்கு இஷ்டமானதைத் தெரிந்து கொள்ளலாம். அது அவரவருடைய ருசிக்கும், அபிப்பிராயத்துக்கும் அடுத்த காரியம் என்ற நிலையிருந்தால் நாம் அதைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. ஒருவன் தனக்கு விருப்பமான ஒரு கொள்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதை உண்மையாய்க் கடைபிடித்து வந்தால் அதனால் கிடைக்கும் நன்மைகள் போதும். ஆனால் "மனுஷனுக்குச் செம்மையாய்த்தோன்றுகிற வழி உண்டு அதன் முடிவோ மரண வழிகள்" என்று ஞானி சாலமோனும், (நீதி 14:12) "கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்று நான் அறிவேன் " என்று தீர்க்கன் எரேமியாவும் (எரே 10:23) சொல்லுகிறார்களே! அதை எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?

பெரும்பான்மையான மக்கள் எம்மதமும் சம்மதம். ஒருவன் ஏற்றுக் கொண்ட கொள்கையில் உண்மையுள்ளவர்களாக இருந்தால் அது போதும் என்றும் சுயதிருப்திப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால் மேற்காட்டிய தேவ வசனங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, மார்க்க சம்பந்தமான காரியத்தில் மனிதனுடைய தத்துவங்கள் சித்தாந்தங்கள் எல்லாம் சரிப்பட்டு வராது என்பதற்கு மற்றும் ஒரு நிரூபணம். அந்த நாட்களில் **"அநேகர் இயேசுவினிடத்தில் வந்து நாங்கள் உம்முடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமே, அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோமே என்று சொல்லுவார்கள். உங்களை ஒருக்காலும் அறியேன்; அக்கிரமச் செய்கைக்காரே என்னை விட்டு அகன்று போங்கள்"** என்று கூறுவேன் என்கிறார் (மத் 7:22,23)மேலும் அவர் "நான் சொல்லிய இந்த வசனங்களைக் கேட்டு இவைகளின் படி செய்கிறவன் எவனோ"(போதகர்களும், மதத்தலைவர்களும் கட்டளையிட்டவைகளை அல்ல)" **அவன் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் செய்யாமல் இருக்கிறவன் எவனோ அவன்தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்"** மத் 7:21-27 என்று தன் தீர்ப்பை வழங்குகிறார்.

ஆகையால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு மனிதனோ அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட மதச்சட்டங்களோ, சித்தாந்தங்களோ (பார்வைக்கு அவைகள் எவ்வளவு நல்லவைகளாகவும், நடைமுறைக்குப் பொருத்தமாக இருப்பினும் சரி) நியாயத்தீர்ப்பு நாளிலே செல்லுபடி ஆகாது - கிறிஸ்து சொன்ன வசனத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம் (யோவான் 12:48) ஆகையால் கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை அலட்சியம் செய்கிற எவனும் தனக்குப் பெரும் நஷ்டத்தையும், சொல்லி முடியாத இழப்பையும் அடைவது நிச்சயம்.

***அப்படியானால் நாம் எப்படி அடைமொழிகள் ஏதும் இல்லாத கிறிஸ்தவனாகலாம்?***

இதை வாசிக்கும் எவராவது கிறிஸ்தவர் ஆக விரும்பினால், தேவனுடைய பிள்ளையாக கிறிஸ்துவின் தொண்டனாக ஆவதற்கு அப்போஸ்தலர் காலத்தில் ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளைச் செய்தல் அவசியம். (அப் 2-ம் அதிகாரம் 36-41) ஆகிய வசனங்களில் அதற்குரிய வழி முறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை வாசித்து விசுவாசியுங்கள், கீழ்ப்படியுங்கள் “பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெருவீர்கள்.

வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்து கொள்ளுங்கள் என்று புத்தி சொன்னான்.

அவனுடைய வார்த்தைகளை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

இங்கே சொல்லப்பட்டிருக்கிற வழி முறைகள் சரியான வழி மட்டும் அல்ல, மிகவும் எளிமையானவைகளும் கூட, இது கர்த்தருடைய வழி, இதனுடைய சுலபமான மாதிரியைப் பின்பற்றுங்கள். அப்போஸ்தலர்களுடைய நேரடிப் பார்வையில் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்பாக மக்கள் இவ்வாறாகத்தான் கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள். அதே போல ஒரு மனிதன் இந்த விசுவாச உபதேசச் சட்டத்துக்குக் கீழ்ப்படியும் போது **‘கிறிஸ்தவன்’**,என்றில்லாமல் வேறொன்றாகவோ, அல்லது **‘கிறிஸ்துவின் சபை’** என்றில்லாமல் வேறொரு மனிதரால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றிலோ சிக்கிக்கொள்வது கிடையாது. அதன் பிறகு அவர் பரிபூரணத்தை நோக்கி நடை போடலாம். திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலையும், கடினமான ஆகாரத்தையும் உண்டு கிறிஸ்துவைப் போல வளருவான். (Iபேதுரு 2:1-3;(IIபேதுரு 3:18).

அப்போஸ்தலர்களின் நடபடிப் புஸ்தகத்தில் இந்த காரியங்களைக் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த விஷயத்தில் யாருக்கேனும் குழப்பம் இருந்தால் ஒரு நல்ல ஒத்த வாக்கிய அகராதியை (Concordance) எடுத்து திருமுழுக்கு என்ற தலைப்பில் உள்ள

அனைத்து வசனங்களையும் வாசித்து சீர்தூக்கிப் பார்க்கக் கடவன். எவ்விதமான கருத்துக்களையும் முன்கூட்டியே தன் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாமல் வேதம் சொல்லுகிறதை மாத்திரம் ஏற்றுக் கொள்ள விரும்பும் பக்குவமுள்ள மனங்களில் தேவ வசனம் சரியான தெளிவைக் கொடுக்கும். திருமுழுக்கு என்பது தண்ணீரில் முழுகி எழுவதையே குறிக்கும் என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி அறியலாம். தேவ வசனம் சொல்லுவதை நம்பி, ஏற்றுக் கொண்டு அதற்கே கீழ்ப்படிவோம்.

சபை சம்பந்தப்பட்ட விஷயத்திலும் அதே நிலை தான். வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது ஒரு சபை தான். "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு.

"ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் எல்லோருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும், எல்லோரோடும், உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர் (எபே 4:4-6)

அப்போஸ்தலர் காலத்தில் கர்த்தர் எப்படி இரட்சிக்கப்பட்டவர்களை இந்த ஒரே சபைக்குள் சேர்த்துக் கொண்டாரோ அப்படியே இப்பவும் செய்வார். (அப் 2:42) மார்க்க சம்பந்தமான எல்லா விஷயத்தைக் குறித்தும் வேதம் தெளிவான முறையில் பேசுகிறது. ஆகவே மனிதர்கள் அந்த உறுதியான அஸ்திபாரத்தின் மேல் நின்று கொண்டு, தேவன் ஒருவருக்கு மட்டுமே கீழ்ப்படிகிறவர்களாகவும், அவருடைய வசனத்தின் அடிப்படையில் காரியங்களைச் செய்து, மாந்த அறிவு சடங்காச்சாரம்; பாரம்பரியம் ஆகியவகைளுக்குச் செவி கொடுக்காமல் கிறிஸ்துவின் மென்மையானதும் இலகுவானதுமான நுகத்தை மாத்திரம் ஏற்றுக் கொண்டு நம்முடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கச் செய்வோமாக! இது ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற சிலாக்கியமும், அழைப்புமாகும், சிந்திப்பீர், செயல்படுவீர்!

**நிறுவன ஆசிரியர்:E.Z. செல்வநாயகம்**

**"திருமறை ஆசான்"** இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9.2.99-டன் ஆறு ஆண்டுகள் நிறைவு பெறுவதை யொட்டி அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது..

- ஆசிரியர்

# ஜெபம் பண்ணுவது எப்படி?

"நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபை தொடங்குவது எப்படி" என்ற தலைப்பின் கீழாக நாம் படித்து வருகிறோம். கர்த்தருடைய சபை இல்லாத ஒரு பட்டணத்திற்கோ அல்லது ஒரு இடத்திற்கோ நீங்கள் செல்ல நேர்ந்து, அங்கு கிறிஸ்துவின் சபையை கண்டுபிடிக்க விரும்பி முயற்சிப்போரின் நிமித்தமாக இக்கட்டுரை தொடர் வெளிவருகிறது. நீங்கள் இதுகாறும், கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக இல்லாவிடில், அங்கத்தினராகும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறோம். நீங்கள் சத்தியத்தின்படி ஒரு கிறிஸ்தவராக மாறியிருந்தும் அல்லது ஏற்கனவே கிறிஸ்துவின் குடும்பத்தில் அங்கமாக இருந்தும், கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்தில் நீங்கள் இருக்க நேர்ந்தால், நீங்கள் இருக்குமிடத்தில், ஒரு கிறிஸ்துவின் சபையைத் தொடங்க நாங்கள் உதவி செய்ய விரும்புகிறோம். இதைச் செய்வதற்கு, இது பற்றி, தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்ற தெளிவான வேத அறிவும், ஆர்வமும், முயற்சியும் இருந்தால், இது போதுமானது. ஒருவேளை, நீங்கள் பேசாமல் அமர்ந்து கொண்டு, யாரோ இதைச் செய்துவிட்டுப் போகட்டும் என்று இருந்துவிட்டால், இக்காரியம் ஒருபோதும் நடைபெறாமலே போய்விடலாம். இம்மாதிரிச் சூழ்நிலையில், கர்த்தரால் பயன்படுத்தப்படுபவராக நீங்கள் இருக்கக்கூடும் என்பதை எண்ணிப் பாருங்கள். கர்த்தரால் நாம் பயன்படுத்தப்படுவது எவ்வளவு ஆனந்தமும், சிறப்பான வாய்ப்புமென்று பாருங்கள்.

இந்தப் பாடத் தலைப்போடு சம்பந்தப்பட்ட அநேக முக்கியமான பாடங்களை நாம் இதுவரை பார்த்துள்ளோம். இப்பொழுது, ஜெபம் பண்ணுவது எப்படி என்று தொடர உள்ளோம்.

நீங்கள் ஒரு பிராந்திய சபை தொடங்கி, அங்கு ஆராதனை, வேதபாட வகுப்பு போன்றவற்றைச் செய்ய வேண்டுமெனில், ஜெபம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் அதை எப்படிச் செய்ய வேண்டுமென்பது பற்றியும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

முதலாவது, ஜெபம் என்றால் என்ன என்று விளக்குகிறோம். பரலோகத்திலிருக்கிற தகப்பனோடு நாம் பேசுவதற்கு நமக்குத் கிடைத்திருக்கும் ஒரு வழிமுறை தான் ஜெபமாகும். வேறு வகையாகச் சொன்னால், ஜெபம் என்பது, தேவனுடைய பிள்ளைகளுக்குக் கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதம் அல்லது சிலாக்கியமாகும். ஆனால், தேவனுடைய பிள்ளைகள்

என்பது யார்? தேவனுக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிப்படைந்து, கிறிஸ்தவர்களாக மாறினவர்கள். இன்னும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இருப்பவர்கள்.

நீங்கள் வேதாகமத்தைப் படித்துப் பார்த்தால், ஜெபமானது, தேவனுடைய மகன் அல்லது மகள் என்ற உறவில் சம்பந்தப்பட்டிருப்பவர்களுக்குத் தான் உரிமையாக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளமுடியும். இரட்சிப்பைப் பெறாத ஒரு பாவி அதாவது தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்தைப் பெறாத ஒருவன், தன்னுடைய ஜெபம் கேட்கப்படும் என்ற எதிர்பார்ப்போடு தேவனை நோக்கி ஜெபிக்கும் தகுதியைப் பெற முடியாது. இயேசுவால் சுகமாக்கப்பட்ட குருடன் இவ்விதம் சொல்லுகிறான்."பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லை யென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து, அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்."(யோவா.9:31)

இந்த மனிதன் ஒரு உண்மையை இங்கு வெளிப்படுத்துகிறான். இவன், பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று சொல்லும் போது, அதாவது அவர்களின் ஜெபத்தைக் கேட்பதில்லையென்று சொல்லும்போது, இதன் பொருள், தேனுடைய உபதேசங்களுக்குக் கீழ்படிந்து, சத்தியத்தின்படி அவருடைய பிள்ளையாக மாறி, அவரை உண்மையாக ஆராதிக்கும் பொழுது, ஜெபத்தைக் கேட்கிறார் என்பது. பேதுரு, "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிக்கிறது" என்று கூறியுள்ளார் (Iபேது 3:12) வெகு காலத்துக்கு முன்பு ஏசாயா தீர்க்கனும் இவ்வாறே கூறியுள்ளார். " இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்கு அவருடைய கை குறுகிப்போகவும் இல்லை கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா 59:1,2)

நம்முடைய ஜெபம் தேவனால் கேட்கப்படுவதற்கு, நாம் தேவனு டைய பிள்ளைகளாக இருப்பது அவசியம் என்ற இவ்வுண்மையைப் புரிந்து கொள்ள ஒரு உதாரணம் தருகிறேன். ஒர அரசாங்கத்தால் தன்னுடைய குடிமகனுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையை, சிலாக்கியத்தை அந்நாட்டைச் சேராத ஒருவன் பெற்றுக்கொள்ளும்படி வேண்டினால், எப்படியிருக்குமோ அது போல் தான். அவனுக்கு கிடைக்காது என்பது நமக்கு நன்றாகவே தெரியும். அதைப் போலவே, தன்னுடைய பிள்ளைகளுக்குச் செவிகொடுப்பது போலவே,

மனந்திரும்பாத ஒரு பாவியின் ஜெபத்தையும் கேட்டு, அதற்கு தேவன் செவிகொடுப்பாரானால், அவருடைய பிள்ளைகளாக இராதவர்களைக் காட்டிலும், அவருடைய பிள்ளைகள் எந்த வகையில் சிறந்தவர்களாக முடியும்? இரண்டு பேருக்கும் கண்டிப்பாக வித்தியாசம் உண்டு. இங்கே தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில், ஜெபம் என்னும் சிலாக்கியம் ஒருவனுக்குத் தேவையெனில், அவன் தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டும்.

வேதவசனங்களில், ஜெபம் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆதி கிறிஸ்தவர்கள், "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப்.2:41) மேலும், பவுல், "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று கூறியுள்ளார்(பிலி.4:6) இன்னும், யோவான் அப்போஸ்தலனும், "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (I யோவா.5:14,15)

தனிப்பட்ட முறையிலும், சபையாகவும் சேர்ந்து ஜெபிக்க வேண்டுமென்பதை ஊக்கப்படுத்தும் அநேக வேத பகுதிகளை நாம் மேற்கோள் காட்ட முடியும், இருப்பினும், நாம் மனதிலே வைத்துக் கொள்வதற்கு சில குறிப்பான வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து சீடர்களைப் பார்த்து, "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். (யோவா.14:13,14) யோவான் 15 - 16ல், "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்" என வாக்குக் கொடுத்துள்ளார். மேலும் கிறிஸ்து, "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களுக்குச் செய்யப்படும் (15:7) மேற்சொன்ன வசனங்களிலிருந்து, ஒருவன் ஜெபிக்க முடியுமென்றும், அப்படி செய்யப்படும் ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு, சில நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருப்பதையும் நாம் காண முடியும் இதை கர்த்தர் தமது சீடர்களுக்குச் சொல்கிறார் அல்லது அவருக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குச் சொல்கிறார். அவரில் நிலைத்திருப்பவர்களுடனும், கிறிஸ்துவுக்குள்ளாகவோ அல்லது அவருடைய சபைக்குள்ளாகவோ இருப்பவர்களுடன் அவர் பேசுகிறார். இயேசுக்கிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறவராயிருக்கிற படியால்,

நம்முடைய விண்ணப்பங்கள் அவருடைய நாமத்தினாலே இருக்க வேண்டும். (ஐ யோவா 2:1) அத்துடன் I யோவா 15:14,15ல் நாம் பார்த்தபடி, ஜெபங்கள் அவருடைய சித்தத்தின்படியாக இருக்க வேண்டுவது மிக அவசியம்.

ஜெபம் பற்றி இன்னும் சில காரியங்களை கர்த்தர் சொல்ல வேண்டியதாயிருந்தது. உதாரணமாக, அவர் சீடர்களைப்பார்த்து, "அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது, மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலேயும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் செய் அப்பொழுது வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும் போது, அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனிப்பினால்,தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். (மத் 6:5-8) மனுஷர் காணும் படியாகவும் , பார்வைக்காவும் ஜெபிக்கக் கூடாதென்று சொன்ன கர்த்தர், எப்படி ஜெபிக்க வேண்டுமென்றும் மாதிரியைக் காண்பித்தார். கிறிஸ்து, அப்படி மாதிரியாகச் சொல்லிக்கொடுத்ததை, அநேக பிரிவினைச் சபைகளால், கர்த்தருடைய ஜெபம் என்று வர்ணிக்கப்பட்டு, தாங்கள் கூருகையில் திரும்பத் திரும்ப சொல்லப்படுகிறது. இது கர்த்தருடைய ஜெபம் அல்ல. ஆகவே, இதை தனியாகவோ அல்லது சபையாகவோ சொல்லக் கூடாது.

அப்படி திரும்பத் திரும்ப சொல்லப்படுமானால், அது மனுஷர் காணவேண்டுமென்றும், மனுஷரால் கேட்கப்படவேண்டுமென்றும், செய்யப்படுகிற வீண் வார்த்தைகளோடு கூடிய ஜெபமாகிவிடும். கிறிஸ்துவானவர், எப்படி ஜெபிக்க வேண்டுமென்பதற்கு ஆதாரமாக இந்த ஜெபத்தை சொல்லிக்கொடுத்தார் அவ்வளவுதான், அந்த ஜெபத்தில் திரும்பத் திரும்ப சொல்வதற்கு விசேஷம் ஒன்றுமில்லை.

இப்பொழுது, ஒரு சபையாகக் கூடி வரும்போது, கண்டிப்பாக அங்கு ஜெபம் இருக்க வேண்டும். கூடி வருகிறவர்கள் தனியாகவும் ஜெபிக்கலாம், யாராவது ஒருவர் ஜெபத்தில் நடத்த, கூட்டாகவும் ஜெபிக்கலாம். கூடி வருகையில், காலமும் கிரமமாயும், நல்லொழுக்கமாயும் செய்யப்பட வேண்டுமாகையில், ஆண் அங்கத்தினர்கள் அதற்கு முன்னமே, அந்தக் கூடுகையில் எத்தனை ஜெபம்

இருக்க வேண்டுமென்றும், யார் யார் அதைச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்க வேண்டும். அல்லது, ஒரு பிராந்திய சபையில் ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போகும் நிலை இருக்குமானால், அந்த குறிப்பிட்ட கூடுகைக்கு பொறுப்பேற்றிருப்பவரோ அல்லது தலைமையேற்றிருப்பவரோ, கூடிவந்திருக்கிற ஆண் அங்கத்தினர்களில் ஒருவரை, ஜெபம் செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். ஒரு கூடுகையில் அல்லது ஆராதனையில் எத்தனை ஜெபங்கள் வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஜெபத்தில் நடத்துபவர், முதலாவது கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும். சபையார்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய உதவியும், வழி நடத்துதலும் கிடைக்கும்படியாக ஜெபிக்கலாம். வியாதியஸ்தர்களுக்காவும், விசேஷ தேவையாளருக்காகவும் ஜெபிக்கலாம். பாவ மன்னிப்புக்காகவும் ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கப்படுகின்ற எல்லா ஜெபங்களும் பரலோகத்தில் இருக்கிற பிதாவை நோக்கியிருக்க வேண்டும். அது மாத்திரமல்ல, இயேசுவின் நாமத்தில் இருக்க வேண்டும். அதாவது, தேவனை நோக்கி ஆரம்பித்து, இயேசுவின் நாமத்தில் முடிக்கப்பட வேண்டும். ஜெபிப்பவர் தெளிவாகவும், கூடிவந்திருக்கிற யாவரும் கேட்கிறவகையில் சத்தமாகவும் ஜெபிக்க வேண்டும். அப்பொழுது, கேட்பவர்கள் அதை தங்களுடைய ஜெபமாகக் கருதி "ஆமென்" என்று சொல்ல முடியும்.

கூடிவந்திருக்கும் அங்கத்தினர்கள் உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டோ, முழுங்காலிட்டோ அல்லது தங்களுக்கு சௌகரியமான நிலையிலோ ஜெபிக்கலாம். ஆனால், எந்த நிலையாக இருந்தாலும் அது தேவனிடத்தில் உங்களது தாழ்மையையும், பயபக்தியையும் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். இதை மறந்துவிடாதீர்கள். வேதாகமம் இது பற்றி தெளிவாகக் கூறுகிறது.

கர்த்தருடைய பந்தியின் போதும், பொருளாதார ரீதியாக கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக காணிக்கைக்கு முன்பாகவும் ஜெபிக்க வேண்டும். காணிக்கை கொடுக்கப்பட்டதற்குப் பின்பும் காணிக்கைக்காக ஜெபிக்கலாம்.

சபையாகக் கூடி வந்திருக்கும் போது, பெண்கள் ஜெபத்தில் வழி நடத்த அனுமதிக்கப்படவில்லை. இது குறித்து விபரமாக பின்னால் வரும் பாடத்தில் படிக்கலாம்.

**J.C. சோட்**

# வசனங்களுடன் ஒப்பிடுதல்

அது ஒரு ஞாயிறு காலை. ஆண்ட்ருவும், ரேச்சலும் அதற்கு முந்தின வாரம் செய்தது போலவே, சபையார் யாவரும் பாப்திஸ்து சபைக்கட்டிடத்துக்கு வந்து சேருவதற்குள், போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று நேரமே வீட்டை விட்டு கிளம்பினார்கள். அங்குள்ள பெயர்ப் பலகையில் ரெவரண்ட் பி.தாமஸ், பாஸ்டர் என்று உள்ளதை கவனித்தார்கள். கதவு திறந்திருந்தது. உள்ளே சென்றதும், கோட்டு சூட்டு போட்டிருந்த ஒரு நல்ல மனிதர் வாழ்த்துத் தெரிவித்தார்.

"காலை வணக்கம்" என்றார். நான் தான் ரெவரெண்ட் தாமஸ் என்றார், நீங்கள் கூட்டத்திற்கு வந்திருக்கிறீர்களா? என்றார்.

"காலை வணக்கம்" ஆமாம், நானும் என் மனைவி ரேச்சலும், பாப்திஸ்து சபை பற்றியும், நீங்கள் என்ன போதிக்கிறீர்கள் என்பது பற்றியும் தெரிந்து கொள்ள ஆவலாயிருக்கிறோம் ஆண்ட்ரூ உண்மையில், ரேச்சல் சிறு பிள்ளையாக இருக்கும்போது, பாப்திஸ்து சபையில் தான் ஞானஸ்நானம் பெற்றாள். நான் குழந்தையாயிருந்த போது கத்தோலிக்க சபையில் கிறிஸ்தவனாக்கப்பட்டேன். நாங்கள் திருமணம் ஆனதிலிருந்து, ஆராதிக்க எங்கும் செல்லவில்லை. ஆனால், தீமோத்தேயு உள்ளதால், நாங்கள் கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்தி, பிள்ளையை சரியான வளர்ப்பில் வளர்க்க வேண்டுமென்பதை உணருகிறோம்.

அவன் சொன்னதை அங்கீகரித்து, "நீங்கள் ஞானமான முடிவெடுத்திருக்கிறீர்கள்" என்றார் பாஸ்டர். "எங்கள் சபையை நீங்கள் கட்டாயம் விரும்புவீர்கள் எங்களுடையது பெரிய சபை. அங்கத்தினர்களுள் பலர் பல வழிகளில் சிறப்புமிக்கவர்கள்" என்றார்.

ஆனால்,ஆண்ட்ரூ, "நாங்கள் எந்த சபையில் அங்கத்தினராவதெனத் தீர்மானிப் பதற்கு முன், பாப்திஸ்து சபையைப் பற்றி அதிகம் கற்றுக் கொள்ள வேண்டும்" என்றான். "இரட்சிப்பைப் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள புதிய ஏற்பாட்டைப்

படித்து வருகிறோம். அது மாத்திரமல்ல, உண்மையைச் சொல்வதென்றால், சபையைப் பற்றியும் தெரிந்து கொள்ள முயற்சித்துக் கொண்டுள்ளோம். புதிய ஏற்பாட்டில் ஒரே சபை இருப்பதாகத் தான் படித்தோம், இருப்பினும், நம்முடைய பட்டணத்திலே கூட பல சபைகள், பல பெயர்களில் உள்ளன அது, ஏன்?" என்றான்.

"ஓ, நீங்கள் ஜனங்களைப் பற்றி நன்றாக தெரிந்து வைத்துள்ளீர்கள்' என்று ஜோக் அடித்தார், பிரசங்கியார். "சபை ஒருவரையும் இரட்சிக்காததால், எந்த சபை என்பது அவ்வளவு முக்கியமானதல்ல. இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதால் இரட்சிப்படைய முடியும் என்பது உங்களுக்கு தெரியும். ஆகவே, ஒரு சபையில் அங்கமாயிருப்பதால் இரட்சிப்படைவதில்லை, அப்படித் தானே? என்றார் பிரசங்கியார்.

"நல்லது நாங்கள் படித்த வசனங்கள் வேறு மாதிரியல்லவா சொல்கிறது, கண்டிப்பாக, இரட்சிப் படைய, ஒருவன் இயேசு தேவ னுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும். ஆனால், அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சபை ஸ்தாபிக்கப்பட்ட நாளில், விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றவர்களின் பாவங்கள் மன்னிக்க ப்பட்ட தென்றும், அதன்பின் கர்த்தர் அவர்களை சபையில் சேர்த்தார் என்றும் உள்ளது. ஆகவே, அந்த நாளில் இரட்சிப்புக்கு, விசுவாசம் மாத்திரம் போதுமானதாக இல்லாமல், அதற்கு அதிகமாகவும் செய்ய வேண்டியிருந்தது. அதுமாத்திரமல்ல, இரட்சிக்கப்பட்ட அனைவரும் சபையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்" உங்களுடைய "பாப்திஸ்து சபை" எப்பொழுது ஆரம்பமானது என்று நீங்கள் சொல்ல முடியுமா?"

"எங்களில் சிலர், இது யோவான் ஸ்நானகன் காலத்தில் தொடங்கியது என்று சொல்லுவோம். அவனிடத்தில் வந்த எல்லோரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களெல்லாம் முதல் "பாப்திஸ்துகள்" எங்களில் வேறு சிலர், 1609 ஆம் ஆண்டு, ஹாலந்து நாட்டிலுள்ள ஆம்ஸ்டர்டம் நகரில், ஜான் ஸ்மித் என்பவரால் முறைப்படுத்தப்பட்ட பாப்திஸ்து சபை தொடங்கப்பட்டது என்று சொல்லுவர். காலங்கள் பல கடந்து விட்டபடியாலும், எண்ணங்களில் வேறுபாடு உள்ளதாலும், இன்றைக்கு உலகில் 30-க்கும் அதிகமான பாப்திஸ்து சபைகளைக் காண முடியும் என்று விளக்கம் தந்தார், பிரசங்கியார்.

அதற்கு, ஆண்ட்ரூ, மத்தேயு 16-ம் அதிகாரத்தில், இயேசு தன் சபையைக் கட்டுவேன் என்று

வாக்குத்தத்தம் செய்வதற்கு முன்பே, யோவான் ஸ்நானகன் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்பதை நாங்கள் திட்டமாகப் படித்திருக்கிறோம், என்றான். இயேசுவின் சபையை யோவான் எப்படி தொடங்கியிருக்க முடியும்? அல்லது 1600களில் ஐரோப்பாக் கண்டத்தில் ஏதோ ஒரு இடத்தில், யாரோ ஒருவரால் தொடங்கப்பட்ட ஒன்று, தமது மரணத்திற்கு சில நாட்களுக்குப் பின்பு, எருசலேமில் இயேசுவால் தொடங்கப்பட்ட சபையைப் போலாக எப்படி முடியும்?

"நாங்கள் இயேசுவிடம் செல்லும் வழியைக் காட்டுகிறோம்! சபை ஒரு போதும், முக்கியமல்ல என்பதை நீங்கள் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும். எந்தச்சபையிலும் இல்லாமலே நீங்கள் இரட்சிப்படைய முடியும். 'நம்முடைய விசுவாசமே நம்மை இரட்சிக்கிறது" என்று மேலும் விளக்கினார், பிசங்கியார்.

"ஞானஸ்நானம் பெறும் போது, நான் மிகவும் சிறியவளாயிருந்தேன்" என்றாள் ரேச்சல். ஞானஸ்நானம் என்பதைத் தவிர எனக்கு எதுவுமே நினைவில் இல்லை. இதில் என்னவெல்லாம் அடங்கியிருக்கிறதென்று எனக்கு விளக்க முடியுமா?

"இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறாயா"?

"ஆம், நாங்கள் விசுவாசிக்கிறோம்" என்று ஆண்ட்ரூ உடனடியாக பதிலளித்தான். "உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறீர்களா"? "ஆம், அவரைத் தவிர வேறு இரட்சகரில்லை" என்று மீண்டும் பதிலளித்தான். "அப்படியானால் உங்களுடைய விசுவாசத்தால் நீங்கள் இரட்சிப்படைந்துவிட்டீர்கள்". "இதற்கு அவ்வளவுதான் இருக்கிறதா?" என்றான் ஆண்ட்ரூ.

"ஆம், இரட்சிப்பென்பது தேவனுடைய இலவச ஈவு. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" என்று யோவான் 3:16-ல் நமக்கு உறுதி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், எபே. 2:8,9-ல், "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" என்றும் கூறப்பட்டுள்ளது என்றார் பிரசங்கியார்.

“ஆனால், சபை ஸ்தாபிக்கப் பட்ட அந்த நாளில் கூடியிருந்த மக்களின் செயல் பற்றி என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் ஒவ்வொரு வரும் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று பேதுரு சொல்லியிருக்கிறானே என்றான், ஆண்ட்ரூ”.

“ஆமாம், நாம் ஞானஸ்நானம் பெற்றோம், ஆனால், ஞானஸ் நானமென்பது உட்புற கிரியைக்கான வெளிப்புறமான அடையாளமே தானே தவிர வேறல்ல. வேறு விதமாகச் சொன்னால், இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, நீ இரட்சிப் படைந்தாயிற்று, அதன்பின்பு, நீ இரட்சிக்கப்பட்டாயென்பதற்கு சாட்சியாக ஞானஸ்நானம் பண்ணப் படுகிறாய் என்று, விளக்கம் கொடுத்தார்”.

“ஒருவன் இயேசுவை விசுவாசிக்கும் போது, அவன் பாப்திஸ்து சபையின் அங்கத்தி னராகிறானா?” என்றான் ரேச்சல். அப்படியானால், விசுவாசிக்கிற யாவரும் “பாப்திஸ்துகள்” ஆகி விடுவர், அப்படித்தானே.

“இல்லை அதாவது, ஒருவன் விசுவாசத்தினால் இரட்சிக்கப் படுகிறான். ஆனால், அவன் தன்னை தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுக்கும் வரை சபையில் அங்கத்தினராவதில்லை” என்று விளக்கினார் பிரசங்கியார்.

“ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் அவன் மரித்தால், பரலோகம் போவான்” என்று ஆண்ட்ரூ கேட்டான்.

“நான் இதுவரை சொன்னது போல், இரட்சிப்பென்பது, தேவனுடைய இலவசமான கிருபை வரம், நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம். இரட்சிப் புக்கும், ஞானஸ்நானத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை” என்றார்.

“ஆனால், எபேசியரில் உள்ள வசனங்களுக்கு நீங்கள் கொடுக்கும் விளக்கத்தைப்பார்த்தால், அப்போஸ் தலரில், ஜனங்கள் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டார் களோ அதற்கு முரண் படுகிறதே” என்றான் ஆண்ட்ரூ.

“என்னை இரட்சிப்பதற்கு கிருபை போதுமென்று தேவன் சொன்னால்” அது போதும் என்று உறுதி கூறினார் பிரசங்கியார். அதற்கு மேல் நான் ஒன்றும் பார்க்கத் தேவையில்லை. நீங்களும் பார்க்கத் தேவையில்லை என்றார்”.

“ஆகையால், நான் இருக்கிற இந்த நிலையிலேயே, இரட்சிக்கப்

பட்டவனாக இந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே செல்ல முடியும். நான் வீட்டுக்குப் போகும் வழியில் மரித்தால், நேரே பரலோகம் போக முடியும்?" என்றார் ஆண்ட்ரூ.

"நீங்கள் இயேசுவை உண்மையாக முழு மனதோடு விசுவாசித்தால்" என்றார். பிரசங்கியார். "ஆனால், விசுவாசத்தி னடிப்படையில், என்னை•பாப்திஸ்து சபையின் அங்கத்தினராக ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்களே" என்று ஆண்ட்ரூ விளக்கம் கேட்டான்.

"இல்லை ரேச்சல் இந்த சபையில் அங்கமாக விரும்பினால், அவள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட பாஸ்டரிடமிருந்து நன்னெறி சான்றிதழ் கொண்டுவர வேண்டும். ஆண்ட்ரூ, நீங்களும் எங்கள் சபையில் சேர்வதாக இருந்தால், உன்னை சபைக்கு முன்பாக ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். நீங்கள் ஞானஸ்நானம் பெறுவதைக் காணும் அங்கத்தினர்கள், நீ அங்கத்தினர் என்பதை அப்பொழுது அங்கீக ரிப்பார்கள்"

"இந்தக்காரியங்களை எங்களோடு விவாதித்ததற்காக நன்றி"-என்று ஆண்ட்ரூ சொன்னான். நாங்கள் தொடர்ந்து வேதாக மத்தைப்படித்து, நாங்கள் செய்வது வேதாகமத்தின்படி சரி தானா என்பதை மிகத் திட்டமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம் என்றான். நாங்கள் அவரை ஆராதிக்க வேண்டுமென்று தேவன் விரும்பு வதால், உங்களுடைய ஆராதனை முறை எப்படி இருக்கிறதென்று தெரிந்து கொள்ள விரும்பினோம். கடந்த வாரம் நாங்கள் கத்தோலிக்க சபைக்குச் சென்றிருந்தோம், வெளிப்புறமாகப் பார்க்கும் போது உங்கள் சபைக்கும், கத்தோலிக்க சபைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு".

"ஆமாம், சரிதான். நாங்கள் அங்கி அணிவதில்லை. தனியாக கொள்கைப் புத்தகமில்லை. பரிசுத்த வான்களை நோக்கி ஜெபம் இல்லை என்று கூறிவிட்டு, உங்களை எங்கள் ஆராதனைக்கு விரும்பி வரவேற் கிறோம்" என்றார் பிரசங்கியார்.

R.R நாயகம்.

B.B சோட்

# தேவ ஆசீர்வாதம் யாருக்கு?

## *1. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு தேவ ஆசீர்வாதம்*

தாவீது சங்கீதத்தில் சொல்கிறார். சங் 115:13ல் கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். ஆபிரகாம் கர்த்தருக்குப் பயந்து, கீழ்படிந்து தன்மகனை கர்த்தருக்குப் பலியிட ஒப்புக்கொடுத்தான். தேவன் ஆபிரகாமை நோக்கி, நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் [ஆதி 22:12] வசனம் 18ல் உன் சந்ததிக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்கிறார். யோபுவைக்குறித்து நாம்வாசிக்கும் பொழுது [யோபு 1:1] உத்தமன் சன்மார்க்கன் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்குவிலகுகிறவன் என்று வாசிக்கிறோம். வசனம் 8ல் கர்த்தர் சாத்தானை நோக்கி என் தாசனாகிய யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும், சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார். தாவீது சொல்கிறார் சங் 128:1-4 இதோ கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான் என்று முடிக்கிறார் ஆக கர்த்தருடைய பிள்ளைகள்தான் கர்த்தருக்குப் பயந்து இவ்விதமான ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள்.

## *2. நீதிமான்களுக்கு தேவ ஆசீர்வாதம்*

நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும் நீதி 10:6 என்கிறார் ஞானிசாலமோன் [ஆதி 7:1] தேவன் நோவாவை நோக்கி இந்த சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன் என்கிறார். நோவாவையும் அவன் குமாரரையும் தேவன் ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் [ஆதி 9:1] விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்ட ஆபிரகாமை தேவன் ஆசீர்வதித்தார். தேவன் சொன்னார். நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன்பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன் உன்னை சபிப்பவர்களை சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் [ஆதி 12:2-3]

## 3. தாராள மனமுடையவனுக்கு தேவ ஆசீர்வாதம்.

தேவனுடையப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தாராள மனமுடையவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நீதி 11:24-ல் வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. வ. 26-ல் தானியத்தைக் கட்டி வைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்; விற்கிறவனுடைய தலையின் மேல் ஆசீர்வாதம் தங்கும். சங் 112:9-ல் தாவீது சொல்கிறார் வாரியிரைத்தான் ஏழைகளுக்குக் கொடுத்தான். அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும் அப்போஸ்தலன் பவுல் மக்கெதோனியா நாட்டுசபையாரின் தாராளமனதைக்குறித்து கொரிந்து சபையாருக்கு நினைப்பூட்டி எழுதுகிறார் IIகொரி 8:2-3-ல் அவர்கள் மிகுந்த உபத்திரத்திலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும். தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள் மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும் தங்கள்திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள் என்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன். இந்த மக்கெதோனியா நாட்டு சபையாரைப் போல இப்பொழுதும் உலகமெங்கும் இருக்கிற ஒவ்வொரு கிறிஸ்துவின் சபையாரும் இருக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

## 4. உண்மை உள்ளவனுக்கு தேவ ஆசீர்வாதம்

ஞானிசாலமோன் சொல்வதைக் கேட்போம். நீதி 20:20 உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; என்றுச் சொல்கிறார். இவ்விதமாக தானியேல் கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல ராஜாக்களுக்கு முன்பாகவும் அதிகரிகளுக்கு முன்பாகவும் உண்மையுள்ளவராய் இருந்தபடியால் அவர் மேல் ஒரு குற்றமும் சுமத்தமுடியவில்லை என்று பார்க்கிறோம். எபிரெய ஆசிரியர் மோசே கிறிஸ்து இருவரையும் குறித்து அவர்கள் தேவனுயை வீட்டில் எப்படி உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள் என்று விளக்கி அவர்கள் தேவனால் பெற்ற ஆசீர்வாதங்களைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

[எபி. 3:2-5-6 பார்க்க]

அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது [I தீமோ 1:2] என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்தரிக்கிறேன். ஆகவே நாமும் கர்த்தருக்கு முன்பாகமாத்திரமல்ல

மனுஷருக்கு முன்பாகவும் அதிகாரிகளுக்கு முன்பாகவும் நாம் நடக்கும் பொழுது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்

## 5. ஆசீர்வதிக்கிறவர்களுக்கு தேவ ஆசீர்வாதம்

தாவீது தன்சங்கீத புஸ்தகத்தில் எழுதுகிறார் [சங் 15:1-5] முதல்வசனத்தில் இரண்டு கேள்விகளைக் கேட்டுவிட்டு கீழ்வரும் வசனங்களில் அவரே பதிலையும் சொல்கிறார்.

நமக்குத் தீங்கு செய்பவர்களையும் நாம் ஆசீர்வதிக்க வேண்டும் என்று சொல்கிறார். நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து தம்முடைய ம லைப் பிரசங்கத்தில் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களை நாம் நினைவு கூறுவது அவசியமான தாயிருக்கிறது மத் 5:44 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்

உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்கிறார்.

அப்போஸ்தலன் பேதுரு சொல்கிறார் I பேதுரு 3:9 தீமைக்குத் தீமையையும் உதாசீனத்துக்கு உதாசீனத்தையும் சரிகட்டாமல் அதற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்கள் என்று அறிந்து. ஆசீர்வதியுங்கள் என்று முடிக்கிறார் பார்க்க ரோ 12:14 அப்போஸ்தலர்கள் கிறிஸ்து போதித்த இந்த உபதேசத்தை அவர்கள் கைக் கொண்டு அவர்களுடைய உபதேசத்தைக் கைகொள்ளுகிற கிறிஸ்தவர்களும் செய்யும்படி நினைப்பூட்டுகிறார்கள்.

நமது ஆண்டவர் கிறிஸ்து தன்னை சிலுவையில் கொலை செய்தவர்க ளுக்காக பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்தார். அதேபோல ஸ்தேவானும் தன்னைக் கல்லெறிந்தவர்களுக்காக பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்தார் [அப் 7:60] ஆகவே இதை வாசிக்கும் பரிசுத்தவான்கள். சென்ற ஆண்டிலே இப்பேர்பட்ட ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள தவறியிருப்போமானால். இந்த புதிய ஆண்டிலே இப்பேர்ப்பட்ட ஆசீர்வாதங்களையும் கிறிஸ்துவுக்குள் சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள புத்தாண்டின் வாழ்த்துக்களைக் கூறி கிறிஸ்துவுக்குள் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

கிறிஸ்துவின் பணியில்

**சகா. யோசுவா செல்வம் அரக்கோணம்.**

# கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவியின் ஊழியம்

### முன்னுரை

தேவத்துவத்தில் ஒருவரானவரும் நித்தியமானவருமான பரிசுத்த ஆவியானவர் நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பும், கிறிஸ்துவுக்குள் வந்த பிறகும் ஊழியம் செய்கிறார். பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துகிறார். கிறிஸ்துவுக்குள்ளாக ஆவியானவர் செய்யும் ஊழியங்களைப் பற்றி சுருக்கமாக கவனிப்போம்.

### கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவி

இயேசுவின் நாமத்திலே நாம் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது பரிசுத்த ஆவியை ஈவாகப் பெறுகிறோம். அப் 2:38 அது மேலும் நாம் விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்படுகிறோம். எபே 1:13, 4:30, எனவே கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ் நானத்தினாலே நாம் பாவமன்னிப்பையும், பரிசுத்த ஆவியையும் பெறுகிறோம். கிறிஸ்துவுக்குள் தான் நமக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிடைக்கிறது.

### ஜெப உதவி செய்கிறார்

நம்முடைய பிதாவாகிய தேவனை அப்பா, பிதாவே என கூப்பிடக்கூடிய புத்திர சுவிகார ஆவியின் மூலமாக நாம் தேவனை நோக்கி ஜெபிக்க முடியும். கலா 4:6. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் பிலிப் 4:6, ரோமர் 8:15, இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் 1தெச 5:17.

### கிறிஸ்தவர்களில் வாசமாயிருக்கிறார்

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா என்று பவுல் எழுதுகிறார் (1 கொரி 3:16) ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனின் உள்ளத்திலும் பரிசுத்தி ஆவியானவர் வாசம் செய்து வழிநடத்துகிறார் 1 கொரி 6:19

### சாட்சி கொடுக்கிறார் !

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியான வர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். (ரோம 8:16) ஆகவே நாம் தேவனுடைய பிள்ளைகளென்று நமக்கு எப்படி தெரியும்?

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆவியுடனே கூட நாம் தேவனுடைய பிள்ளைகளென்று சாட்சி கொடுக்கிறதின் மூலமாக தெரிகிறது. ஆகவே நிச்சயமாக அவர் நம்மோடிருக்கிறார் நம்மை முத்தரித்திருக்கிறார். எபே 4:30

***மனித ஆவியை பலப்படுத்துகிறார்.***

நமக்கு சோர்வு, சோதனைகள், பாடுகள்,துக்கம், கவலை, தொல்லைகள் போன்றவற்றை, சாத்தான் உண்டாக்கும்போது அதைத் தாங்கக் கூடிய பெலனையும், தந்து அதிலே தப்பித்துக் கொள்ளக் கூடிய போக்கையும் உண்டாக்குகிறார். 1 கொரி 10:13 இன்னும் பவுல் ரோமசபையாருக்கு எழுதும்போது நம்முடைய ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான் களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர். ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (ரோமர் 8:27.)

***புதிய உடன்படிக்கையை நம் இருதயத்தில் எழுதுகிறார்***

எரே 31:31 - 34ல் புதிய உடன்படிக்கையை கொடுப்பதாக தேவன் வாக்களித்தார். அந்த புதிய உடன்படிக்கை ஆவிக்குரியதாயிருக்கிறது. அது அன்பின் கீழும், விசுவாசத்தின் கீழும் கிறிஸ்துவினுடைய எல்லா உபதேசத்தையும் கைக்கொள்ளுகிறது. அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன், நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் (எபி 8:10) இப்படியாக ஆவிக்குரிய சகல சட்டங்களையும் கைக்கொள்ள ஆவியானவர் உதவி செய்கிறார்.

***தேவ அன்பை ஊற்றுகிறார்.***

தேவன் அன்பாகவேயிருக்கிறார். அவருடைய தெய்வீக அன்பினாலே சகலத்தையும் தாங்கி, சகலத்தையும் சகிக்கிறார். 1கொரி 13:1-8 இப்படிப்பட்ட தேவனுடைய அன்பை நம்முடைய இருதயத்தில் பரித்த ஆவியானவர் ஊற்றுகிறார். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது (ரோமர் 5:5)

***முடிவுரை***

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்கு இப்படிப்பட்ட தெய்வீக அன்பைக் கொடுத்து உலகத்திற்கு சேவை செய்யவும், ஊழியம் செய்யும் ஏவுதல் செய்யவும், வழிநடத்தி, பாதுகாத்து ஜெப உதவி செய்து மனுஷனுடைய ஆவியை பெலப்படுத்துகிறார் அவரை நாம் துக்கப்படுத்தாமல் கிறிஸ்துபோல சிந்தித்து. கிறிஸ்துவைப் போல செயல்பட்டு ஆவியின் சிந்தையில் வளர்ந்து ஆவியின் கனிகளைக் கொடுக்க நம்முடைய தேவன் உதவி செய்வாராக

Bro.V. PANNEERDOSS.

# தண்ணீரைப்போல தளம்பினவன்

வலிமைமிகு வாலிப நண்பர்களுக்கு வல்லமை வாய்ந்த வானவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் வாழ்த்துக்கள். நமது எதிர்காலம் வான் முகில் தழுவ அமைய வேண்டும் என்கிற சீரிய இதயத்து நினைவுகளோடும், எதையும், எங்களால் சாதிக்கமுடியும் என்கிற இளஇரத்தம் கொண்டோர்களாய் திகழும் வாலிப நெஞ்சங்களே. அனுபவம் மிக்கோர் அறிவுரை செய்தால் அற்பமாக எண்ணி அசட்டை செய்யும் பருவமிது. புத்தியுடையார் இந்த பருவத்தில் மிக முக்கிய முடிவுகளை அனுபவத்துணையின்றி எடுப்பதில்லை, எடுப்போர் பலரோ, தண்ணீரில்லா மேகங்கள் போல் காற்றினால் அலைக்கழிக்கப்படுவதையும், தண்ணீரைப் போல தளம்புவதையும் பார்க்கிறோம்.

வேதாகமத்தில் அறிவு பொக்கிஷங்களை அள்ளி தந்திருக்கும் ஞானி சாலமோன் தன் நீதிமொழிகளில் எழுதியிருப்பதை கவனமாய் படியுங்கள் "ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்" (நீதி 11:14) என்கிறார். ஒரு முடிவு எடுக்கும் முன்பு, பல முறை ஆழமாய் பல கோணங்களில் சிந்தியுங்கள், பின்பு அந்த முடிவினால் உண்டாகும் விளைவை பற்றி அதிகமாய் சிந்தித்து அதன் பின்பே, ஒரு முடிவுக்கு வாருங்கள் சுகமாயிருப்பீர்கள். சிந்திக்காமல் முடிவு செய்து பின்பு அதை பற்றி நீங்கள் கண்ணீர் சிந்தக் கூடாது என்பதற்காக, தன் முடிவுகளில் தண்ணீரைபோல தளம்பின ஒரு வாலிபனை எடுத்துக்காட்டாக வைக்கவிரும்புகிறேன். முற்பிதாவாகிய யாக்கோபின் முதல் குமாரனான ரூபன் தான் நமக்கு எடுத்துக்காட்டாக முன் நிற்கிறான், சற்று அவனை பற்றி சிந்திப்போம் வாருங்கள்.

### சகோதரனாகிய யோசேப்பை காப்பாற்றுவதில் தடுமாறியவன்

தனக்கு பிரியமான மனைவியிடம் முதல் குமாரனாக பிறந்ததால் யாக்கோபுக்கு யோசேப்பிடம் ஒரு அலாதி பிரியம், அது மற்ற புத்திரர்களுக்கு பொறாமை என்னும் தீய எண்ணத்தை தீவிரமாய் தழைக்க செய்தது. சூரியன் மறைந்து, வீட்டிற்குள் விருந்தாளியாய் வெகுநேரமாய் தங்குவதற்காய் இருள் சூழ்ந்த வேளையில், உழைத்த களைப்பால் உண்டு உறங்கின யோசேப்புக்கு வந்தது ஒரு கனவு, கனவின் அர்த்தம் கேட்டு கதி கலங்கிப்போன உடன்பிறப்புகள் அவன் தங்களுக்கு சாதம் கொண்டுவருகையில் சதி ஒன்று செய்தனர்.

யாக்கோபின் மூத்த மகனாகிய ரூபன், அவனை தப்புவிக்கும்படி நல் யோசனை சொல்கிறான் (ஆதி 37:22) அவனுடைய நல்ல மனசு மெச்சகூடியதுதான் ஆனால் நன்கு சிந்தித்தால், அவன் ஆலோசனை சொல்கிறவனாய் மாத்திரமே இருக்கிறான் அல்லது வாய் சொல்லில் வீரனாக இருந்திருக்கிறான். சகோதரனை காப்பாற்ற நினைத்தவன், அதை செய்து முடிக்கும் வரை அங்கேயே இராமல், எங்கோ சென்று விட்டு, பின்பு வந்து யோசேப்பை குழியில் காணாதபடியால், அவனை அடிமையாய் விற்றதறியாமல் நான் என்ன செய்யட்டும், என்ன நடந்ததோ! என்று (ஆதி 37:30) ஆலாய் பறக்கும் பொறுப்பற்ற மூத்த சகோதரனை பார்க்கும் போது அவன் எடுத்த காரியத்தில் உறுதியானவனாக தெரியவில்லை, இப்படிப்பட்டவர்கள் தங்கள் வழிகளிலெல்லாம் நிலையற்றவர்களாக திகழ்வார்கள் (யாக் 1:8)

இன்றும் அப்படிதான், கிறிஸ்துவின் வசனத்தில் உறுதிப்படாமல், அவரை ஏதோ பணம் அச்சிடும் ரிசர்வ் வங்கி என்றும், அவரை பின் பற்றினால் வசதிகள் பல வந்து சேரும் என்றும் நினைத்து கலப்பையில் கைவைத்துவிட்டு, அவருடைய நாமத்திற்காக பாடுபட வேண்டும் என்ற நிலைவரும்போதோ பின்னிட்டு பார்க்கும் பித்தலாட்டக்காரர்களாகயிருக்கிறார்கள். ஓரிடத்தில் நிலையில்லா தண்ணீரைப்போல தளம்புகிறார்கள். நாமோ அப்படியிராமல் ஒரு முடிவெடுக்கும் முன், இயேசு வலியுறுத்தியது போல் அதன் விளைவை அறிந்து பின்னர் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் (லூக் 14:28-33)

## சகோதரனாகிய பென்யமீனை எகிப்துக்கு அழைத்துச்செல்வதில் தடுமாற்றம்

பென்யமீன், யாக்கோபின் அளவில்லாத அன்பை பெற்ற ராகேலின் இறுதி நாட்களில் பிறந்தவன். காலம் கரைந்தது, யோசேப்பு எகிப்தில் அநேக உபத்திரவங்களை சகித்து, கர்த்தர் உயர்த்துவார் என திடமாய் நம்பினதால், தேவன் அவனேடிருந்து அரசனுக்கு அடுத்தப்படியாக மதிக்கும்படி அவனை உயர்த்தினார். தெவிட்டாத தேனமுதாய் விளங்கும் நீதிமொழிகளில் "சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள் ராஜா அவனுக்குச் சிநேகிதனாவான்"," தன் வேலையில் ஜாக்கிரதையாயிருப்பவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்" (நீதி 22:11,29) என்ற வசனங்கள் இவனை மனதில் கொண்டு எழுதப்பட்டதோ என்று எண்ணத்தோன்றுகிறது. உலகெங்கும் கொடிய பஞ்சம் வந்த கொடுமையால், எகிப்தில் தானியம் கிடைக்கிறது என்றறிந்து, அங்கே பணத்துடன் பட்டாளமாய், பயத்துடன் பவ்யமாய் பணிந்து நின்றனர், யோசேப்பின் உடன்பிறந்த பத்து பேர்கள்.

பென்யமீன் வராததறிந்த யோசேப்பு அவனை பார்க்க ஆவல் கொண்டு சில காரியங்களை செய்து, சிமியோனை சிறைப்படுத்தினான். ஊர் திரும்பிய ஒன்பது பேர்களை பார்த்து, சிமியோனை காணாமல் ஒடுங்கிப் போனான் யாக்கோபு, இளையவனாகிய பென்யமீனை அழைத்துவரும்படி உத்தரவிட்டான் எகிப்தின் அதிகாரி(யோசேப்பு) என்றறிந்து பதற்றமடைந்தான் யாக்கோபு சாலமோன் கூற்றுக் கேற்ப மனோதுக்கத்தினாலே யாக்கோபின் ஆவி முறிந்து போயிற்று , (நீதி 15:13) பதற்றத்தைக் தணிப்பதாக எண்ணி, பத்திரமாக அழைத்து செல்லும் பொறுப்பை என்னிடம் விடுங்கள் என தன் தந்தையிடம் பெருமிதமாய் வாக்களித்தான் ரூபன் "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் "(நீதி 25:11) என்பது உண்மைதான் ஆனாலும் ரூபனின் ரூபமறிந்த தந்தை வாக்கின் ஆழமறிந்து, முடியாது என ரூபனின் வாயடைத்துவிட்டார். அவனோ, விட்டது தொல்லை என்றெண்ணியவனாய், மருந்துக்காவது மற்றொரு முறை மன்றாடாமல் பொறுப்பை உதறி தள்ளுகிறவனாகவே திகழ்ந்தான். நான் அழைத்து செல்வேன் என்று அவர் முடிவெடுத்து அதனை நிறைவேற்றாமல் தன் வாழ்வின் வழக்கத்தின் படியே தண்ணீரை போல தளம்பினான்.

வாக்கில் மட்டும் தடுமாறியவனாய் காணப்படாமல் செயலிலும் தன் தகப்பனின் மஞ்சத்தை தீட்டுப்படுத்தினவனாகவே இருந்தான். இந்த பெரும் பாவத்தினால்தான் தன் சேஷ்டபுத்திரபாகத்தையும் இழந்து போனான் (I நாளா 5:1) இதையெல்லாம் அறிந்து தானோ யாக்கோபு தன் குமாரர்களை ஆசிர்வதிக்கும் போது இவனை தண்ணீரை போல தளம்பினவனே என்று உவமைபடுத்தி கூறினாரோ (ஆதி 49:3,4)

சிலுவை பாடுகளை சிலர் அதிசோகமாய் சித்தரிப்பதை கேட்டு உணர்ச்சியின் வசப்பட்டு என் வாழ்வின் எல்லைமட்டும் எனக்கு வாழ்வளித்த இயேசுவை வழுவாமல் பின்பற்றுவேன் என்று வாய்நோகாமல் வாக்களித்துவிட்டு, சற்று நேரம் கழித்து சிற்றின்பத்தை எண்ணியவுடன் பேரின்ப ராஜனாம் இயேசுவை மறந்தேபோகும் மனிதர்கள் மலிந்துகிடக்கிறார்கள். நாமோ அப்படியிராமல் இந்த வாலிப காலத்தில் அவருடைய வசனத்தின் படியாக நம்மை காத்துக்கொண்டு, பவுலை போல கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை பிரிப்பவன் யார் என்று தைரியமாய் விசுவாசத்தில் உறுதிப்பட்டவர்களாய் இறுதிவரை நிலைத்திருப்போம் (கலா 5:1, I பேதுரு 5:9)

**ஜே. பிக்கின்ஸ்**

**திருமறைஆசான்**

# கர்த்தருக்குப் பயப்படும் பயம் எங்கே?

உலக தோற்றமுதல் இதுவரையிலும் தொடர்ந்து, நாள்தோறும் பெருகிக் கொண்டே வருகின்ற கொடூரமான வன்முறைகள், படுகொலைகள், கொள்ளைகள், ஜாதி இன கலவரங்கள், சமுதாய சீர்கேடுகள், வஞ்சகம், ஏமாற்றுதல், பொய் பித்தலாட்டங்கள், லஞ்ச ஊழல்கள், வரதட்சனை கொடுமைகள், குடும்ப சீரழிவுகள், பழிவாங்கும் தீய செயல்கள், காம வெறியாட்டங்கள், தகாத உறவுகள், கற்பழிப்பு சம்பவங்கள், தவறான போதை பழக்க வழக்கங்கள், கீழ்ப்படியாமையின் ஒழுங்கீனங்கள், மதம் என்ற பெயரில் நடைபெறுகின்ற அட்டூழியங்கள், மற்றும் எல்லா நாசமோச செயல்களும், விபரீதங்களும் ஏன் ஏற்படுகின்றன? இது போன்ற துணிகரமான, வெளியரங்கமான பாவங்களும் மற்றும் மறைவான, அந்தரங்கமான பல தீய குற்றங்களும் ஏன் மனிதனை தொடர்ந்து பிடிக்கின்றன? இவைகளுக்கெல்லாம் ஒட்டுமொத்த காரணம் தான் என்ன? என்பதை நிதானமாக ஆராய்ந்து, அதற்கான விபரத்தை ஒரே வரியில் சுருக்கமாகவும், மிக ஆணித்தரமாகவும் பதில் சொல்ல வேண்டுமானால், இந்த உலகத்தின் பெரும்பான்மையான ஜனங்களுக்கு தெய்வபயமில்லை என்ற காரணத்தையே அறிய முடியும். இதைக் குறித்து,பரிசுத்த வேதாகமத்தின் இரண்டு பாகங்களான பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் "அவர்கள் கண்களுக்கு முன்பாக தெய்வபயமில்லை என்று எழுதியிருக்கிறதே" (சங்கீதம் 36:1; ரோமர் 3:10-18)

## யாருக்குப் பயப்பட வேண்டும்?

பொதுவாகவே மனிதர்கள் பயப்படும் காரியங்கள் பலவிதமுண்டு. அவைகளில் நியாயமில்லாத, அர்த்தமற்ற, காரணமில்லாத பயங்களும் உண்டு. உடல் ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ தங்களிலும் அதிகவலிமை, மேலான அதிகாரம், அந்தஸ்து, பதவி, செல்வாக்கு உள்ளவர்களுக்குப் பயப்படுவதும்; சரீரத்தில் அவ்வப்பொழுது ஏற்படுகின்ற பற்பலவியாதிகள், கொடிய நோய்களுக்குப் பயப்படுவதும்; உலகத்தின் சரீரவாழ்வுக்கு முடிவு கட்டுகிற சாவு என்ற மரணத்திற்கும் மற்றும் பேய், பிசாசு போன்ற அசுத்த ஆவிகளைப் பற்றிய பீதியிலும்; மத சார்பான விஷயங்களில் நம்பத்தகாத, ஆதாரமற்ற, கற்பனையான கட்டுக்கதைகளுக்கும்; மனிதர்களுடைய கைவேலைப்பாடுகளான ஊமையான விக்கிரகங்கள், சிற்பங்கள், சித்திரங்களாலான பொய்யான தெய்வங்களுக்கும், மாயமந்திரங்கள், பில்லிசூனியத்திற்கும் மற்றும் மாயையான அர்த்தமற்ற கனவுகளுக்கும் பயந்து நடுங்குவார்கள். இது போன்ற காரணமில்லாத அர்த்தமற்ற வீண்பயங்கள் ஒன்றான

மெய் தேவனை அறியாதவர்களுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுமாகிய அவிசுவாசிகளிடத்திலே தான் காணப்படும். இப்படிப்பட்ட பயமுள்ளவர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினிக்கடலாகிய நரகத்திலே தான் பங்கடைவார்கள் (வெளி 21:8) எனவே நாம் யாருக்குப் பயப்பட வேண்டும் என்று இயேசு மிக அருமையாக கூறியிருக்கிறார். "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்தேயு 10:28)

## கர்த்தருக்கு ஏன் பயப்பட வேண்டும்?

வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்கும், மந்தைகள் தங்களை மேய்ப்பவருக்கும், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்கும், சீஷன் தன் குருவுக்கும், சமுதாயம் அதனுடைய சட்ட திட்டங்களான மேலான அதிகாரங்களுக்கும் உட்பட்டு, மதித்து, கீழ்ப்படிய வேண்டியதைப் போலவே மானிடராய் பிறந்த ஒவ்வொருவருமே தங்கள் சிருஷ்டிகரராகிய ஆவியாயுள்ள மெய்யான தேவனுக்கு முன்பாக பயந்து அவருடைய உபதேசங்களைக் கைக்கொண்டு முற்றிலும் அவருக்கே கீழ்ப்படிய வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில்,

அவரே சகலவற்றையும் சிருஷ்டித்த மேலான தேவன். அவருக்கு ஒப்பானவன் ஒருவனுமில்லை. (எரேமியா 10:6,7;சங்கீதம் 33:6-19;89:6,7)

மனிதனோ மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டவன், தேவனோ வானாதிவானங்களுக்குமேலாக உயர்ந்தவரும், பெரியவரும், மிகவும் ஸ்தோத்தரிக்கப்பட்டவரும், பயங்கரமுமான தேவன். ஆதலால் மனிதர்கள் அவருக்குப் பயப்பட வேண்டும் (ஏசாயா 33:5,6;சங்கீதம் 96:4,9)

வல்லமையும், பராக்கிரமமும், பயங்கரமான மகத்துவமும் அவரிடத்தில் உண்டு, (யோசுவா 4:23,24; யோபு 37:22-24:சங்கீதம் 76:7-10)

தேவனுக்கு நிகரான அல்லது விரோதமான ஞானமும், புத்தியும், அறிவும், ஆலோசனையும் இல்லை (நீதி மொழிகள் 21:10;ஏசாயா 40:13-18; யோவு 38,39 அதிகாரங்கள்)

ஆவிகளின் பிதாவும், எஜமானரும் அவரே (மல்கியா 1:16;எபிரெயர் 12:9) அற்புதரும், மகிமையானவைகளையும், பலத்த காரியங்களையும் செய்கிறவராயிருக்கிறார் (1 சாமுவேல் 12:24)

அவர் ஜீவனுள்ளவரும், என்றென்றும் நிலைத்திருக்கிறவருமாயிருக்கிறார் (தானியேல் 6:26)

கர்த்தருக்குப் பயப்படும்படிக்கு அவரிடத்தில் மன்னிப்பும், மிகுந்த இரக்கமும் உண்டு (சங்கீதம் 130:3,4)

மரித்த எல்லோரையும் உயிரோடு எழுப்புகிற தேவனாக இருக்கிறார் (1 கொரி 6:14; 1 தெச 4:14)

நியாயத்தீர்ப்பு அவரிடத்தில் இருக்கிறது (வெளி 14:7;1பேதுரு 1:7)

அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறது (எபிரெயர் 4:13; சங்கீதம் 139:1-16)

சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 14:12)

அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் (அப்போஸ்தலர் 10:34,35)

அவருக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை (பிரசங்கி 12:13)

இன்னும் இது போன்ற அத்தியாவசியமான காரணங்களினால் மனிதனானவன் கர்த்தருக்கு முன்பாக பயந்து வாழ கற்றுக் கொள்ள வேண்டும் (ஏசாயா 8:12, 13; சங்கீதம் 2:11)

## கர்த்தருக்குப் பயப்படும் பயம் எது?

கிறிஸ்துவத்திலே காணப்படுகின்ற எல்லா நாமகரண பிரிவினைக் கூட்டத்தாரிடத்திலும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் தவறாகப் போதிக்கப்பட்டு, தாறுமாறாக, அவரவர் மனப்போக்கின்படியே பின்பற்றப்படுகிறது. இது வேத வசனத்திற்கு நேர் எதிரான செயலாகும். எனவே கர்த்தருக்குப் பயப்படும் பயம் எது? என்ற கேள்விக்கான சரியான பதிலை அறிவதற்கு முன், எவைகளெல்லாம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஆகாது என்பதை முதலில் புரிந்து கொள்வது நல்லது. தேவசித்தத்திற்கு எதிரான எந்த செய்கையுமே கர்த்தருக்குப் பயப்படும் பயமாகாது. (மத்தேயு 7:21-27; லூக்கா 6:46) அதாவது கிறிஸ்தவம் என்ற பெயரில் கைக்கொள்ளுகின்ற விக்கிரக ஆராதனைகள், குழந்தை ஞானஸ்நானம் (தெளிப்பு, ஊற்றுதல்) புனிதர்களுடைய வழிபாடுகள், பண்டிகை, திருவிழா, கேளிக்கைகள், பாரம்பரியக் கொள்கைகள், சம்பிரதாய சடங்காச்சாரங்கள், மார்க்க விஷயங்களில் சொந்த அபிப்ராய பேதங்கள், கற்பனையில் தோன்றுகின்ற உபதேசங்கள் மற்றும் கர்த்தர் கட்டளையிடாத மனித சட்டங்கள் போன்ற வேத வசனத்திற்கு மாறான கொள்கைகளை எத்தனை திரளான கூட்டத்தார் பின்பற்றினாலும், அவைகளை எவ்வளவு தான் பயத்தோடும், பக்தியோடும், பரவசத்தோடும், பணிவோடும், மன உறுதியோடும், சரீர ஒடுக்கத்தோடும், கடும் வைராக்கியத்தோடும் செய்தாலும் அவையாவும் தேவபக்தியாகவோ, அல்லது கர்த்தருக்குப் பயப்படும் பயமாகவோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இப்படிப்பட்டவர்களைக் குறித்து தேவன் ஏசாயா என்னும் தீர்க்கதரிசி மூலமாக, "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து. தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறாக்ள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது. (ஏசாயா 29:13;57:11,12) என்று கூறியுள்ளார். எனவே கர்த்தரைப் பற்றும் பயமும்; தேவபக்தியும் வெறும் வெளிப்படையான பரவசத்தினாலோ அல்லது உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்ச்சிகளின் அடிப்படையிலோ மற்றும் சொந்த அனுபங்களின் சாட்சியாகவோ காணப்படாமல் ஆவியாகவும், ஜீவனுள்ளதாகவும்,

வல்லமையுள்ளதாகவும், இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகவும் உள்ள தேவனுடைய கிருபையுள்ள வசனங்களின் அடிப்படையில் மட்டுமே சார்ந்ததாகக் காணப்பட வேண்டும். (ஏசாய 66:2;8:12,13) தீமையை வெறுப்பதும் (நீதி 8:13) பொல்லாப்பை விட்டு விலகுவதும் (யோபு 28:28) கர்த்தருடைய வார்த்தைக்கு மட்டுமே செவிகொடுத்து (நீதி 1:33; மத்தேயு 17:5) கீழ்ப்படிவதுமே (ஆதி 22:12;1 சாமு 15:22; ஏசாயா 11:2,3) கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஆகும். உதாரணமாக ஒருவன் தேவசித்தத்தின்படியே இரட்சிக்கப்பட (I தீமோ 2:4) கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து (மாற்கு 16:16) பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்வதும் (2 கொரி 5:17) பின்பு தொடர்ந்து தேவபக்தியோடே முடிவுபரியந்தமும் கிறிஸ்துவின் சபை ஐக்கியத்தில் நிலைத்திருந்து, (மத்தேயு 24:13; எபி 10:24,25; அப் 2:42) நாள்தோறும் இடைவிடாமல் தன் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுவதுமே கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஆகும். (நீதி 23:17;28:14; பிலி 2:12; 2தீமோ 4:7,8)

### *கர்த்தருக்குப் பயப்படுவதால் என்ன நன்மை?*

கர்த்தருக்குப் பயப்படுவதால் கணக்கற்ற நன்மைகளையும், மெய்யான சமாதானத்தையும், நிலையான சந்தோஷத்தையும், ஆசீர்வாதங்களையும் பெறலாம். ஏனெனில் தமக்குப் பயப்படுகிறவர்களுக்கும், தம்மை நம்புகிறவர்களுக்கும் தேவன் உண்டு பண்ணி வைத்திருக்கிற நன்மை எவ்வளவோ பெரியதாக, மிகுதியாக இருக்கிறது. (சங்கீதம் 31:19;128:1-4)

கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு எவ்வித குறைவுமில்லை. (சங்கீதம் 34:9-11)

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி 1:7;9:10;15:33)கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு; தீமை அவனை அணுகாது (நீதி 19:23;10:27)

கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணகண்ணிகளுக்குத் தப்பலாம்; அவனுக்குத்திட நம்பிக்கை உண்டு (நீதி 14:26,27)

கர்த்தருக்குப் பயந்தவர்களுடைய நாமங்கள் ஞாபகப்புத்தகமாகிய ஜீவபுத்தகத்தில் (பரலோகத்தில்) எழுதப்பட்டிருக்கிறது.

(மல்கியா 3:16; லூக்கா 10:20; பிலிப்பியர் 4:3;எபிரெயர் 12:23)

சான்றோர்களே, உங்கள் வாழ்க்கையில் கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்து கொண்டு, கணக்கற்ற வானத்தின் ஆசீர்வாதங்களையும், பூமியின் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்வீர்களாக.

**S. செங்கோல்ராயன்**
பாண்டிச்சேரி

# "என் கிருபை உனக்குப் போதும்"

"அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக்குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாய் இருக்கும் போதே பலமுற்றவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும் நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்" (2 கொரி 12: 7-10)

அப்போஸ்தலன் பவுல் சில தனிப்பட்ட தேவ சலுகைகளை அனுபவித்திருந்தான். அதற்காக அவன் தவறாக பெருமை அடைந்திருக்கக் கூடும்; ஆனால் கண்டு பிடிக்க இயலாத "மாம்சத்திலே ஒரு முள்" அவனை வேதனைப்படுத்தி, அவனுடைய அகந்தையை அகற்றியது.

வேதனையிலிருந்து விடுதலைபெற பவுல் தொடர்ந்து, மனப்பூர்வமாக ஜெபித்த போதிலும், அவனுக்குப் பதில் கிடைக்கவில்லை. அவனுடைய வேண்டுகோளை கர்த்தர் நிராகரித்து விட்டு, பதிலுக்கு: "என் கிருபை உனக்குப் போதும்" என்பதை அவன் ஏற்றுக் கொள்ளச் செய்தார். பவுல் படித்த பாடமும், நாம் படிக்க வேண்டிய ஒரு பாடமும் என்ன வென்றால், "...நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்க கற்றுக் கொண்டேன்" என்பதாகும். (பிலிப் 4:11).

தேவனுடைய சித்தத்திற்கேற்ற, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களின் எல்லா ஜெபங்களையும் அவர் கேட்கிறார் என்பதை அவருடைய வாக்குத்தத்தத்திலிருந்து அறிந்து கொள்ளலாம் (1 யோ, 5:14-15). இப்படிப்பட்ட

எல்லா ஜெபங்களையும் தேவன் கேட்கிறார் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள முடியும். அவருடைய சித்தத்திற்கு ஏற்றபடி ஜெபம் செய்த பின்னர், நமது ஜெபங்களை தேவன் கேட்டிருக்கிறார், பதிலளிப்பார் என்பதில் சந்தேகப்படக்கூடாது (யாக் 1:6) அதன் பின்னர் நடக்கும் காரியங்களில் (ரோமர் 8:28 பார்க்க) தேவனின் பதிலும்,அடங்கும். அது உடனடியாகவும் இருக்கலாம், தாமதமாகவும் இருக்கலாம். அது "ஆம்" என்றோ அல்லது "இல்லை" என்றே இருக்கக்கூடும். நாம் எதைக் கேட்டோமோ அல்லது எதிர்பார்த்தோமோ அதிலிருந்து வித்தியாசமாக இருக்கக்கூடும். தேவனின் கிருபை நமக்குப் போதும் என்றே எப்போதும் நாம் கருத வேண்டும். தேவனின் சித்தத்தின் பிரகாரமான ஜெபத்தைப் பற்றிய பெரிய காரியம் என்ன வென்றால், பதில் வருகிறதா இல்லையா என்று நாம் சோதித்துப் பார்க்கத் தேவையில்லை (மத் 8:5-13)

வாரத்தின் முதல்நாள் நாம் பங்கு கொள்ளும் கர்த்தரின் பந்தியில் நினைவு கூருவோம் : "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (II கொரி 8:9),

தேவன் அருளும் கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

**எஸ்.எஸ். ராஜன்**

*தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர் கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளாவார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்*

*சேனைகளின் கர்த்தாவே உம்மை நம்பி இருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் 84:12)*

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO
## SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, பிப்ர 99
Jan 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு "**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.**

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER

BOOK-POST

TO

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.